# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,**
**சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.0297/2015

ஆணை எண்.24 /2015

நாள்: 31/12/2015

தினமலர் நாளிதழ்
சென்னை பதிப்பு — **04.11.2015** நாளிட்ட செய்தி

ஆணையாளர்,
பல்லவபுரம் நகராட்சி, - எதிர் மனுதாரர்

04.11.2015 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தியினை பகுதி குறிப்பெடுக்கப்பட்டு, 05.11.2015 நாளன்று 297/2015 எண்ணிட்ட புகார் மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**ஆணை:**

04.11.2015 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தியில், பல்லவபுரம் நகராட்சி, குரோம்பேட்டை பகுதியில் பாதுகாப்பு கவசங்கள் இன்றி, கழிவு நீர் கால்வாய் தூர்வாரும் பணியில் துப்புரவு பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்படி செய்தி சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. பல்லவபுரம் நகராட்சியில் உள்ள 42 வார்டுகளில் 13 வார்டுகள் துப்புரவு பணிக்காக தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பல்லவபுரம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சியில் 311 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருவதாகவும், அவர்கள் அனைவரும் நிரந்தர பணியாளர்கள் என்றும் தெரிவித்துள்ளார். துப்புரவு பணிக்கென பாதுகாப்பு கவசங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், உபகரணங்களை

பணியின்பொழுது தவறாமல் பயன்படுத்தவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கையினை பதிவு செய்து இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடிக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

31/12/15
கண்காணிப்பாளர்

பெறுநர்

ஆணையாளர்,
பல்லவபுரம் நகராட்சி
பல்லவபுரம்.